## 15. செய்த செயலுக்கு பலன் கிடைக்கும்!

காட்டில் உள்ள விலங்குகளுக்குப் புதிய கவலை!
காட்டு ராஜா சிங்கத்து வயதாகி விட்டது.
அதனால் என்ன?
சிங்கத்தால் வேட்டை ஆட முடியாது, எனவே தினமும் ஒரு மிருகம் அதன் குகைக்குத் தானாகவே சென்று விட வேண்டுமாம்.
இது ஓநாயின் யோசனையாம்!
சாப்பிடும் மிருகத்தில் ஓநாய்க்கும் பங்கு உண்டாம்.
தப்பிக்க நினைத்தால் பின்னாலேயே புலி வருமாம்!
என்ன செய்வது?
காட்டுக்குள் இந்த புதிய ப்ரச்சனைக்கு வழி தெரியாமல் அனைவரும் சோர்ந்தனர்.
அப்போது ஒரு குரங்கு தைர்யமாக குகைக்குள் சென்று சிங்கத்தைப் பார்த்து,
"மஹாராஜா! சற்று யோசியுங்கள்!
வேட்டை ஆடி உண்பது இயற்கைக
அதில் ஒன்றும் ஐயமே இல்லை!
ஆனால் இப்படி ஒவ்வொருவரையாகக் கொன்று உண்பது பாவம்!
நம்மால் முடியாத போது, கெட்ட புத்தியால் சாதிக்க நினைப்பது பாவம்.
இன்று எங்களைச் சாப்பிடலாம்.
யோசியுங்கள், கொஞ்ச காலத்தில் யாருமே இல்லாமல் போய் விடும் நிலை வருமே!
அப்போது என்ன செய்வீர்?
இதை விட ஊருக்குள் இருக்கும் சர்க்கஸ் காரர்கள் பிடித்துக் கொண்டும் போனால் என்ன செய்வீர்கள்?"
என்று அறிவுரை கூறியது.
அதை சிங்கமும் உணர்ந்து திருந்தியது.
தாங்கள் சாப்பிடும் உணவில் ஒரு பங்கை முறையாக ஒவ்வொரு விலங்கும் சிங்கத்துக்குத் தந்து உதவியது.